**<u>சார்பு நீதிமன்றம், இலால்குடி.</u>**

OS. No. 227/2018, Date: 29.01.2021

DW1- பனையடியான்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது தம்பிகள் பெயர் கனகராஜ் மற்றும் சிதம்பரம் ஆகும். எனது தகப்பனார் அருணாச்சலம் உயில் எழுதிவைத்ததாக சொல்வது சரிதான். அந்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். அந்த உயில் ஆவணத்தில் சர்வே எண்.159/18-ல் உள்ள வீடு குறித்து தான் காட்டியுள்ளார். என் வீட்டிற்கு மேற்கே வாதி சுப்பிரமணியன் தான் உள்ளார். சர்வே எண்.159/2017 சொத்திற்கு மேற்கே நீலமேகம் என்பவரின் சொத்து உள்ளது. மேற்படி நீலமேகத்தின் சொத்திற்குரிய சர்வே எண்.159/4 என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 159/17-க்கு கிழக்கே சர்வே எண். 159/18 உள்ளது. சர்வே எண் 159/18 சொத்து முழுவதும் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. இந்த வழக்கிற்கு விவரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் கூறினேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பழைய சர்வே எண்.38 பாகமானது புதிய சர்வே எண்.159/17, 159/18 மற்றும் 159/4-ல் ஒரு பகுதி என்று கூறியிருக்கிறேனா என்று கேட்டால் மேற்படி சொத்துக்களில் சர்வே எண்.159/4 அதில் சேராது. 28.06.1949 ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் சர்வே எண். 159/4-ல் ஒரு பகுதி சொத்தை சேர்த்து அருணாச்சலம் முத்திரையர் கிரையம் வாங்கியதாக என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை. யுடிஆர் திட்டத்தில் குறிபிட்டிருந்த சர்வே எண்.159/17 சொத்தை மட்டும் ரத்துச் செய்ய வேண்டும் என்று நாங்கள் வட்டாட்சியாருக்கு மனு கொடுத்துள்ளோம். சர்வே எண். 159/4-ல் எங்களுக்கு சொத்து எதுவும் இல்லை. வட்டாட்சியாருக்கு கொடுத்திருந்த மனுவின் நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த மனுவுக்கு கொடுக்கப்பட்ட ரசீதையும் நான் தாக்கல் செய்யவில்லை. எந்த தேதி, மாதம், வருடம் மனு கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சர்வே எண். 159/4 சொத்தையும் குறிப்பிட்டு விட்டு தற்போது அந்த சொத்தை கூறவில்லை என்று மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பானர் எழுதி வைத்த உயில் ஆவணத்தை தாக்கல் செய்தால் எனது வழக்குக்கு விரோதமாகிவிடும் என்பதற்காகவே அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி கனகராஜ் மீது சர்வே எண். 159/18 சம்மந்தமாக வழக்கு போட்டு சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பாகவே அது முடிந்துவிட்டது. அந்த

வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை என்னால் தாக்கல் செய்ய இயலும். அந்த வழக்கின் தீர்ப்பாணையை தாக்கல் செய்தால் எனக்கு விரோதமாக போய்விடும் என்பதற்காகத்தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனது தகப்பானர் சொத்துக்காக தான் நான் இந்த வழக்கில் ஆஜராகி வருகிறேன். வாதிக்கு 7 சென்ட் மட்டுமே சொந்தமான நிலையில் அவருக்கு 8 1/2 சென்ட் நிலம் உள்ளதாக பிரஸ்தாபித்து வருவதால் தான் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை இருந்து வருகிறது. சர்வே எண். 31/6 ல் எனது தகப்பானர் அருணாச்சலம் முத்திரையர் சண்முகம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். 1942 தேதிய கிரையப் பத்திரத்தை என்னால் தாக்கல் செய்ய இயலும். 1951 ம் வருடம் சர்வே எண். 31/6 ல் வாதி 8 1/2 சென்ட் நிலம் கிரையம் வாங்கியதாக கட்சி செய்கிறார். அதுசம்மந்தமாக வழக்கு எதுவுமில்லை என்று சொன்னால் அளக்கும் சமயத்தில் வாதி பிரச்சனை செய்ததால் தான் தகராறு உள்ளது. வாதிக்கு மேற்படி 8 1/2 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதா என்பது குறித்து வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. சர்வே எண். 31/6 ல் கட்டுப்பட்ட சொத்தை அளப்பதற்கு நில அளவையருக்கு கட்டணம் செலுத்திய ரசீது என்னிடம் உள்ளது. வாதி சர்வே எண். 31/6 ல் கட்டுப்பட்ட சொத்தில் 8 1/2 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுவிட்டார் என்று சொன்னாலும் மீதி உள்ள நிலத்தில் தான் எனக்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 31/6 ல் எனக்கு பாத்தியப்பட்டட நிலத்திற்கு 1983 ம் வருட என் பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். சர்வே எண். 159/17 யை வாதிக்கும் சர்வே எண். 159/18 யை எனக்கும் எனது தகப்பானர் கொடுத்து சர்வே எண். 159/17 யைப் பொறுத்து வாதிக்கு பட்டா ஏற்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த பட்டா குறித்து நான் எந்தவொரு ஆட்சேபனையும் செய்யாமல் மனு கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் அதுகுறித்து ஆவணங்கள் எதையும் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 159/17 வாதிக்கு பாத்தியப்பட்டு அவருடைய முழுமையான அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணில் கண்ட சொத்து எந்த காலத்திலும் எனக்கு பாத்தியப்படவில்லை என்று சொன்னாலும் அது என்னுடைய அனுபவத்தில் இருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் உயில் ஆவணத்தை நான் தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.